கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.14/2016**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.09.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 18.09.2024 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | வாசுதேவன் | வயது.. | 49 |
| தந்தை பெயர்.. | ராதாகிருஷ்ணன் | Official Witness | VAO, சி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. **UDR** பதிவேடு எந்த வருடம் தயாரிக்கப்பட்டது என்றால் 1983. பானுமதி தற்சமயம் உயிருடன் இருக்கிறாரா என்றால் நான் விசாரிக்கவில்லை. மாதவபடையாட்சி தற்சமயம் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். மாதவபடையாட்சி இறந்தது சமந்தமாக கிராமத்தில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். புல எண்.120/7 க்கு அருகில் ராமசாமியின் மகன் தியாகராஜன் சொத்து உள்ளதா என்றால் தியாகராஜன் கூரை போட்டுள்ளார். தியாகராஜன் சி.முட்லூர் கிராமம் மணவெளி தெருவில் தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். தியாகராஜன் குடியிருக்கும் வீட்டின் கதவு எண். தெரியுமா என்றால் தெரியாது. அவர் குடியிருக்கும் வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

2. நான் சி.முட்லூர் கிராம நிர்வாகஅலுவலராக எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் Aug 2023. ச.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண்.120/7 யார் பெயரில் உள்ளது என்றால் மாதவன் பெயரில். மாதவன் எப்போது இறந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாதவனுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் அதுபற்றி நான்

விசாரிக்கவில்லை. புல எண்.120/7 க்கு தென்புரம் புல எண்.120/9 உள்ளது என்றால் சரிதான். புல எண்.120/9 மாதவன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண்.120/7 க்கு வடக்கால் புல எண்.120/5 உள்ளது. புல எண்.120/9 யில் தற்போது தியாகராஜன் உள்ளார் என்றால் சரிதான், கொட்டகை போட்டுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் புலைபடத்தில் உள்ள வீடு தான் தியாகராஜன் கொட்டகை என்றால் சரிதான் (அந்த ஆவணம் தான் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது, அதறக்கான குறுந்தகடு பிரதிவாதியால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது). அந்த கொட்டகைக்கு வடக்கால் தான் புல எண்.120/7 அமைந்துள்ளது.

3. கொட்டகைக்கு வரி விதிப்பு உள்ளதா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள மரங்களை யார் பயிர் செய்வது போன்ற விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். புல எண்.120/7 யார் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல எண்.120 யின் வரைபடம் FMB தற்போது **ச.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கணிணி அ பதிவேட்டில் புல எண்.120/7 புஞ்சை எனவும் பட்டாதாரர் மாதவன் மற்றும் ஒரு நபர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புல எண்.120/9 புஞ்சை எனவும் பட்டாதாரர் மாதவன் மற்றும் ஒரு நபர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் புல எண்.120/5 புஞ்சை எனவும் பட்டாதாரர் பெயர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒரு நபர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. அந்த நிலங்கள் தற்போது வரை புஞ்சையாக தான் உள்ளதா என்றால் மனைகளாக மாற்றப்படவில்லை, புஞ்சையாக தான் உள்ளது. புல எண்.120/5 கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒரு நபர் உள்ள நிலையில் யார் அந்த ஒரு நபர் என்றால் ராமசாமி மகன் தியாகராஜன் என சிட்டா பதிவேட்டில் உள்ளது. புல எண்.120/9 -க்கு மாதவன் மற்றும் ஒரு நபர் உள்ள நிலையில் யார் அந்த ஒரு நபர் என்றால் பானுமதி, தந்தை மற்றும் கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. பானுமதி பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் விசாரிக்கவில்லை. அ-பதிவேட்டில் ஆதிமூலம் என்பது ஆறுமுகமாக pencil ஆல் எதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முந்தைய கிராம அலுவலர எழுதியிருப்பார் அது பற்றி எனக்கு தெரியாது.

5. பள்ளிக்கூடத்தை ஒட்டியுள்ள Compound சுவர் புல எண்.120/7 க்கு எந்த பக்கம் உள்ளது என்றால் அந்த சுவர் புல எண்.120/9 யில் அமைந்துள்ளது. புல எண்.120/7 மேல்புரம், கீழ்புரம், வடபுரம் ஆகிய மூன்று பக்கங்கள் மட்டும் அடைக்கப்பட்டுள்ளது. புல எண்.120/5,7,9 ஆகியவற்றை வீடு மற்றும் தோட்டம் என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.120/7 யில் வீடு இல்லை, தோட்டம் மட்டும் தான் உள்ளது. சி.முட்லூர் கிராமத்தை சேர்ந்த லோகநாதன் மகன் தேவராசு -யை தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து தியாகராஜனின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், அதை தெரிந்துக்கொண்டே வருவாய் ஆவணங்களில் அவ்வாறு இல்லாத காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Additional District Munsif
Chidambaram.